# DEPOSITION OF WITNESS

## Judicial form No,53

## (See Rule 42)

## (Chapter XXIII Code of Criminal Procedure

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI

| C.C. 117/2018 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.1/ புகார்தாரர் |
| பெயர் | புஸ்பாமணி |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | |
| கணவர் பெயர் | பழனிச்சாமி |
| கிராமம்: முதலிபாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 27.06.2024

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தோட்டத்தில் கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன பழனிச்சாமி எனது கணவர் ஆவார். கடந்த 25.04.2018ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் வேலையை முடித்து வீட்டிற்கு வந்த போது, என் வீட்டுக்காரரின் மாமா வேலுச்சாமி ஒரு பையனிடம் சொல்லி எனது கணவருக்கு அழகாத்ரி பாளையம் அருகே தண்ணி வண்டி இடித்து விபத்து ஏற்பட்டதாக சொல்லி அனுப்பினார். சம்பவ இடத்திற்கு அருகில் எனது கணவரின் சித்தி வீடு இருப்பதால் அவர்கள் என்னை கணவரை மருத்துவமனைக்கு அழைத்து முதலுதவி முடித்து அவரது சித்தி வீட்டில் இருக்க வைத்திருந்தார்கள். என் கணவர் அன்றைய தினம் இரவு அங்கேயே தங்கி விட்டார். மறுநாள் காலை என் கணவர் நெஞ்சு மற்றும் வயிறு வலிப்பதாக சொன்னதால் ஆம்புலன்ஸ் வரவழைத்து அவினாசி அரசு மருத்துவமனைக்குகொண்டு

சென்றார்கள். மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் சேயூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்தப் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்தப் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 242(3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு செலவுத் தொகையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.06.27 18:43:32 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.

**DEPOSITION OF WITNESS**

**Judicial form No,53**

**(See Rule 42)**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 117/2018 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.2/ கண்ணுற்ற சாட்சி |
| பெயர் | மஞ்சு பிரியா |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | |
| கணவர் பெயர் | சிவசாமி |
| கிராமம்: அழகாத்ரிபாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 27.06.2024

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25.04.2018 ம் தேதி மாலை 04.00 – 04.30 மணியிருக்கும். எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகே சில பேர் உட்காந்திருந்தோம். அப்போது பழனிச்சாமி முதலிபாளையத்திலிருந்து சேயூர் நோக்கி கிழக்கிலிருந்து மேற்காக நீல நிற இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது எதிர் திசையில் தண்ணீர் வண்டி ஒன்று வந்தது. வளைவில் அந்த தண்ணீர் வண்டி பழனிச்சாமியின் வாகனத்தின் மீது மோதியதில் அவர் கீழே விழுந்தார். நாங்கள் போய் பார்த்த போது, அவருக்கு காலில் மட்டும் சின்னக்காயம் ஆகியிருந்தது. நாங்கள் மூன்று பேர் சேர்ந்து அவரை கோவிலுக்கு அருகே அழைத்துப் போய் படுக்க வைத்தோம். சிறிது நேரத்தில் அவரது உறவினர்கள் வந்து அழைத்து சென்றார்கள். இவ்விபத்திற்கு காரணம் அந்த வாகனம் வேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்தது தான் காரணம் ஆகும்.

தண்ணீர் வண்டி ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன். தற்போது பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் தண்ணீர் வண்டி ஓட்டி வந்த நபர். (சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்). விபத்து நடந்த மறுநாள் பழனிச்சாமி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 242(3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு செலவுத் தொகையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.06.27 18:43:42 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial form No,53</u>

<u>(See Rule 42)</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure</u>

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 117/2018 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.3/ கண்ணுற்ற சாட்சி |
| பெயர் | ஹரி சம்பத் |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | நடராஜ் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: அழகாத்ரிபாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : அவினாசி | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 27.06.2024

Accused present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 25.04.2018ம் தேதி மாலை 04.30 மணியளவில் அழகாத்ரிபாளையம் விநாயகர் கோவில் அருகே நான் என் தோட்டத்து பைப்பை வேலை செய்து கொண்டிருந்த போது, பழனிச்சாமி இரு சக்கர வாகனத்தில் சேயூரிலிருந்து முதலிபாளையம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தார். அப்போது எதிர் திசையில் தண்ணீர் லாரி வளைவில் அவர் மீது மோதிவிட்டது. அவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் அவரது உறவினர்கள் வந்து அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 242(3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு செலவுத் தொகையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.06.27 18:43:51 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial form No,53</u>

<u>(See Rule 42)</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure</u>

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 117/2018 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.4/ பார்வை மகஜர் சாட்சி |
| பெயர் | சிவசாமி |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | சென்னியப்பன் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: அழகாத்ரிபாளையம் | ஜாதி : |
| தாலூக்கா : அவினாசி | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 27.06.2024

Accused present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். 2018ம் வருடம், தேதி நினைவில்லை. ஒரு நாள் பழனிச்சாமிக்கு விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து 26ம் தேதி சம்பவயிடத்திற்கு அருகே நான் இருந்த போது, போலீசார் அங்கு வந்து அந்த இடத்தை பார்த்து மேப் போட்டார்கள். அப்போது காலை 09.00 மணியிருக்கும். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்தப் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 242(3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு செலவுத் தொகையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2024.06.27 18:44:01 +0530

நீதித்துறை நடுவர்,
(முழு கூடுதல் பொறுப்பு)
அவிநாசி.